# Path to Dharma

தர்ம நெறி ஓம் **Dharma Neri**

**News Letter 11** செய்தி மடல்



ஷேத்திர (வயல்) விநாயகர் ஆலயம்,
முன்னேஸ்வரம், சிலாபம்

**Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**
**hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com**

**Author : B.S.Sarma, Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

**Sri Sankar Publications**

**November 2008** நவம்பர்

**Path to Dharma - தர்ம நெறி - News Letter -11 - செய்தி மடல்**

**November 2008 நவம்பர்**

**Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**
ஷேத்திர (வயல்) விநாயகர் ஆலயம், முன்னேஸ்வரம், சிலாபம்

hot mail; kshethravinayaka@yahoo.com: munneswaram@yahoo.com

**Editor : B.S.Sarma, Kshethra Vinayaka Temple,Sri Munneswaram,Chilaw,Sri Lanka.**

# திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் – சக்தியை வியந்து அருளியது)

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை 1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
திருவெம்பாவை 2. பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
திருவெம்பாவை 3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
திருவெம்பாவை 4. ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
திருவெம்பாவை 5. மாலறியா நான்முகனுங் காணா மலையினை
திருவெம்பாவை 6. மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
திருவெம்பாவை 7. அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
திருவெம்பாவை 8. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
திருவெம்பாவை 10. பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
திருவெம்பாவை 11. மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
திருவெம்பாவை 12. ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
திருவெம்பாவை 13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்
திருவெம்பாவை 14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
திருவெம்பாவை 15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
திருவெம்பாவை 16. முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
திருவெம்பாவை 17. செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
திருவெம்பாவை 18. அண்ணாமலையான்அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
திருவெம்பாவை 19. உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
திருவெம்பாவை 20. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்

ஓம்
திருச்சிற்றம்பலம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

–திருமந்திரம் (திருமூலர் அருளியது)

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்;
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்;
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

– திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் – சேக்கிழார்

திருவெம்பாவை 1.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்

மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்

மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து

போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்

ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே

ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

தோழியர் கூற்று : ஆரம்பமும் முடிவும் அற்றதோர் அரிய பெரிய ஜோதியை நாங்கள் எல்லோரும் பாடுகின்றோம். அதனைச் செவியுற்றும் வாள் போன்ற அழகுடைய கண்களைக் கொண்ட நீ இன்னும் துயில் கொள்கின்றாயே! உன் காதுகள் இரண்டுமே உணர்ச்சி அற்றுப்போய்விட்டனவா ? ஆதியும் அந்தமும் இல்லாத, பெரிய தேவனாகிய சிவபெருமானின் அழகான கழல்களை வாழ்த்திய வாழ்த்தொலி வீதியின் தொடக்கத்தில் கேட்ட அந்த வேளையிலேயே விம்மி விம்மி மெய்ம்மறந்து தான் இருக்கும் பல வண்ண மலர்கள் நிறைந்த படுக்கையிலேயே தன்னை மெய்ம்மறந்து ஒருத்தி படுத்துக் கிடக்கிறாள். அவளுடைய திறமை தான் என்னே! இதுவோ உன்னுடைய உண்மையான தன்மை, எம் தோழி? ...கூறு?

மாது – பெண்; வளருதி – தூங்குகின்றாய்; போது – மலர்; அமளி – படுக்கை.

திருவெம்பாவை 2.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போ(தும்) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

தோழியர் மொழிவது : இரவு பகலென்று பாராமல், நாம் பேசும் வேளையெல்லாம், "எனது பாசப்பிணைப்பு பரஞ்சோதியான சிவபெருமானிடமே" என்று கூறுவாய். எனினும் உண்மையில் நறுமணம் கமழும் பல்வேறு மலர்கள் நிறைந்த இந்தப் படுக்கையின் மீது தானே உன் விருப்பத்தை வைத்தாயோ? தெரியவில்லையே! படுத்திருக்கும் தோழி: சீ! சீ!! இவ்வாறா நீங்கள் மொழிவீர்கள் ?
**தோழியர் இயம்புவது: இதுவா விளையாடுவதற்கும் பழிப்பதற்கும் உரிய இடம் மண்ணோரும், விண்ணோரும் வணங்கக் கூசுகின்ற பூப் போன்ற பாதங்களை நமக்குத் தந்தருள் செய்ய வரும் ஒளியே உருவான, சிவலோகனான, தில்லைச் சிற்றம்பலத்து இறைவனின் அன்பு எங்கே ! நாம் எங்கே ! எம் தோழியே? கூறு?**
போது – மலர்; அமளி – படுக்கை; தேசன் – ஒளியுருவன்.

திருவெம்பாவை 3.

முத்தன்ன வெண்நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

தோழியர் செப்புவது : நன் முத்தைப் போன்று ஒளி பொருந்திய புன்னகையைக் கொண்டவளே! எங்கள் யாவருக்கும் முன்னதாகவே எழுந்திருந்து, "என் அத்தன், ஆனந்தன்,அமுதன்" என்று வாய் திளைக்க இனிக்க இனிக்கப் பேசுவாயே தோழி? இன்று உனக்கு என்ன ஆயிற்று !? வந்து உடனே கதவைத் திற ! படுத்திருக்கும் தோழி: பத்து குணங்களை உடையவர்களே ! இறைவனின் அடியார்களான முதிர்ச்சி பெற்றவர்களே ! என்னிடம் நட்புடையவர்களே ! அன்புடையவர்களே! என்னுடைய குற்றத்தை நீக்கி புதியவளாகிய என்னையும் இறைவனின் அடியார் ஆக்கிக்கொண்டால் என்ன குற்றமா ?
**தோழியர்: நீ இறைவன் மேல் கொண்டுள்ள அன்பு எங்களுக்குத் தெரியாதா என்ன ? உள்ளம் ஒருங்கு பட உள்ளவர்கள் நம் சிவபெருமானைப்பாடாது போவாரோ என்ன ? எங்களுக்கு இதெல்லாம் தேவைதானா ! இறைவனின் அன்பு எங்கே ! நாம் எங்கே ! எம் தோழியே? கூறு?**
பத்து – <u>தசகாரியம்</u>; பாங்கு – நட்பு;புன்மை – கீழ்மை.

திருவெம்பாவை 4

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

தோழியர் கூறுவது : பொலிவான முத்தைப் போன்று இனிய புன்னகையைக் கொண்ட தோழியே! இன்னுந்தானா உனக்கு விடியவில்லை ?
துயிலும் தோழி: (அழகான கிளி பேசும் சொற்களைப் போன்று பேசும் தோழி) தோழியர் எல்லாரும் வந்து சேர்ந்து விட்டார்களா ?
தோழியர்: உள்ளதையே எண்ணியே கூறுகின்றோம். கண் மூடித் துயில் கொண்டு வீணாகக் காலத்தைப் போக்காதே ! விண்ணுலகமே போற்றும் ஒரே மருந்தை, வேதத்தால் உயர்வாக உணரப்படும் மேன்மையான பொருளைக் காண, இனிய சிவபெருமானை நெக்குருகக் கசிந்துருகிப் பாடுவதற்கு வந்துள்ள நாங்கள் இவற்றையெல்லாம் ஒருபோதும் செய்யவே மாட்டோம். தேவையானால் நீயே வந்து எண்ணிச் சரிபார்த்க்கொள். குறைந்தால் இன்னுந்தூங்கிக்கொள் தோழி !

ஒண்ணித்திலநகையாய் – முத்துப் போன்ற புன்னகையாய் (ஒள் நித்தில நகையாய்).

### திருவெம்பாவை 5

மாலறியா நான்முகனுங் காணா மலையினை
நாம் போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

தோழியர் சொல்வது: "திருமாலும் நான்முகனும் அடிமுடி காணமுடியாத மலையை நாம் அறிவோம்" என்று உண்மையை உணர்ந்தவர்களைப் போன்று பொய்யாகவே கூறிக்கொண்டிருக்கும் தோழியே, பாலும் தேனும் போன்ற இனிய சொற்களைப் பேசும் வஞ்சகியே, கதவைத் திற ! இவ்வுலகமும், விண்ணுலகமும், பிறவுலகங்களும் அறிவதற்கு அரிய பெருமானுடைய திருக்கோலமும், அவர் எங்களை ஆட்கொண்டு குற்றங்குறைகளை அகற்றி நீக்கும் பெருமையையும் பாடி "சிவனே! சிவனே!" என்று நாங்கள் பேரொலியாய் ஓலமிட்ட போதும், நீ சற்றும் உணர்ச்சியேயில்லாமல் இருக்கின்றாயே ! நறு மணம் நிறைந்த கருமையான நீண்ட கூந்தலை உடையவளே, இதுவோ உனது தன்மை ? எம் தோழியே? கூறு?

பொக்கம் – பொய்; படிறீ – ஏமாற்றுக்காரி; ஞாலம் – உலகம்; ஏலக்குழலி – மண
ம் சேர் கூந்தலை உடையவள்.

### திருவெம்பாவை 6

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

தோழியர் பேசுவது: மான் போன்று துடுக்கான பண்பை உடைய

அழகியே! நேற்று, நீ " உங்களை நாளை நானே வந்து எழுப்புவேன்" என்று கூறிவிட்டு, வெட்கமோ, ரோசமோ இல்லாமல் இன்று எங்கு போய்விட்டாய் ? இன்னுமா பொழுது புலரவில்லை என்கிறாய்? வான் உலகும், பூமியும், பிற யாவை யும் அறிதற்கு அரிய பெருமான், தானே நேரில் வந்து கருணையோடு

நோக்கி எங்களை ஆட்கொண்டு அருள் பாலிக்கிறான். அவனுடைய வானென நெடிய கழல் அடிகளைப் பாடி வந்து கொண்டிருக்கும் எங்களுக்குப் பதில் சொல் ! எம் தோழியே? கூறு?

உடல் உருக தொழாமல் இருக்கின்றாய் ! உனக்குத் தான் இது பொருந்தும் ! எங்களுக்கும் ஏனைய எல்லாருக்கும் ஒரே தலைவனான சிவபெருமானை நினைந்து பாடு ! எம் தோழியே? நினைந்து பாடு !

நென்னலை – நேற்று; தலையளித்து – கருணைகூர நோக்குதல்; ஊன் – உடல்.

திருவெம்பாவை 7

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்அரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

தோழியர் மொழிவது: அன்னையே ! உன் குணங்களில் இவையும் சில குணங்க ளோ?! தேவர்கள் பலர் எண்ணிப்பார்த்தலுக்கும், நினைத்தலுக்கும் அரியவனான செம்பொருளாகிய சிவபெருமானின் சின்னங்களைச் செவிமடுத்த உடனேயே "சிவ சிவ" என்று கூறுவாய்.
"தென்னாடுடைய பெருமானே" என்று சொல்லி முடிப்பதற்குள்ளேயே நெருப்பிலிட்ட மெழுகு போல உருகிவிடுவாயே! எம்பெருமானை, "என் அரசே ! இனிய அமுதம் போன்றவனே !" என்று நாங்கள் எல்லோரும் பலவேறு வகையாகச் கூறுகின்றோம். இன்னும் நீ உறங்கு

குகின்றாயோ ! (உணர்வற்ற) உறுதியான நெஞ்சம் கொண்டவரைப் போல சிறு அசைவும் இன்றிக் கிடக்கின்றாயே !தூக்கத்தின் தன்மை தான் என்னே ! இதுவோ உனது தன்மை ? எம் தோழியே? கூறு?

உன்னல் – நினைத்தல்; இருஞ்சீர் – மிக நேரிய தன்மை; சின்னங்கள்– சிவச் சின்னங்கள் (சங்கு முதலான ஒலிகள்); அரையன் – மன்னன்;வாளா – சும்மா; பரிசு – தன்மை.

திருவெம்பாவை 8

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங்காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

தோழியர் சொல்வது : கோழி கூவத் தொடங்கும் பொழுது மற்றைய

பறவைகள் யாவும் கீச்சிட்டு ஒலிஎழுப்புகின்றன.இசைக் கருவிகள் இசைக்க, வெண்சங்கும் ஒலிக்கின்றது.ஒப்பற்ற பரஞ்சோதியான பெருமானையும், ஒப்பற்ற அப்பெருமானின்பரங்கருணையையும், மேன்மையான மாசற்ற (சிவம் சார்ந்த) பொருட்களை பற்றியும் பாடினோம். உனக்கு அவையொன்றுமே கேட்கவில்லையா ? இது அப்படி என்ன நித்திரையோ, கூறுவாய் ! திருமாலைப் போன்று பக்தி செய்யும் முறையும் இப்படித்தானோ ! இதுவோ உனது தன்மை ? எம் தோழியே? கூறு?

ஊழிகள் எல்லாவற்றிற்கும் முன்பே தொடங்கி அழிவின்றி நிற்கும் சிவபெருமானை நினைந்து பாடு ! எம் தோழியேஒப்பற்ற பரஞ்சோதியான பெருமானை நினைந்து பாடு!

குருகு – பறவை; ஏழ் – ஏழு சுரங்களால் ஆன இசை(க்கருவி);கேழ் – ஒப்பு; விழுப்பொருள் – மேன்மை தங்கிய பொருள்; ஆழி – சக்கரம்;ஏழை – பெண்(சக்தி).

திருவெம்பாவை 9

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய். 9

தோழியர் கூற்று : வரலாற்றுக்கு முன்னே தோன்றிய மிகப் பழமையான பொருள்களுக்கு எல்லாம் பழமையான முதல்வனே! வரலாற்றுக்கு பின்னே தோன்றிய நவீன புதுமையான பொருள்களுக்கு எல்லாம் புதுமையானவனே! உன்னைப் பிரானகப் பெற்ற உன்னுடைய உண்மையான அடியார்களான நாங்கள், உன்னுடைய அடியவர்களை வணங்குவோம்; அவர்களுக்கே நண்பர்களாவோம்; அத்தகையவர்களையே நாங்கள் திருமணம் முடித்துக்கொள்வோம்; அத்தகையவர் சொல்லும் சொற்படியே அவர்களுக்கு அடியவர்களாய்ப்பணி புரிவோம். இவ்வாறே எங்களுக்கு எம்பிரான் அருள் புரிந்தால் எங்களுக்கு எந்தக் குறையுமே இல்லை!

பேர்த்தும் – புதுமையான; பாங்கு – நட்பு; பரிசு – முறை; தொழும்பு அடிமை

திருவெம்பாவை 10

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன் தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலார் எம்பாவாய். 10

தோழியர் கூற்று : எம்பெருமானுடைய பாத மலர்கள் பாதாளங்கள் ஏழிற்குக் கீழும் சென்று கூறுவதற்கும், கற்பனைக்கும் எட்டாதவையாக உள்ளன; இறைவனின் மலர் கொண்ட நிறை சடையும் பொருள்கள் எல்லாவற்றின் எல்லைகளையும் கடந்தன; ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியான அவன் மாதை ஒரு பாகம் கொண்டவன்; அவன் திருவுருவங்களோ ஒன்றிரண்டல்ல ! பலப்பல! வேதங்கள் முதலாக மண்ணோரும், விண்ணோரும் துதிக்கின்ற போதும் ஒருவராலும் இவ்வாறு என இனங்காணப்பட முடியாதவன்; ஒரே துணைவன்; தொண்டர் உள்ளத்தே எப்பொழுதும் உறைபவன்; சிவன் கோயிலில் பணிசெய்யும் குற்றமற்ற குலப்பெண் பெண்களே ! எம்பெருமானுடைய ஊர் எது ? பேர் எது ? யார் உறவினர்கள் ? யார் உறவினரல்லாதவர்கள் ? அப்படிப்பட்ட பண்பாளனை எவ்வாறு பாடுவது ?!

சொற்கழிவு – சொல்லமுடியாத; போது – மலர்; உலவா – முடியாத;கோது – குற்றம்; பரிசு – வழி.

திருவெம்பாவை 11

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர்என்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போற்
செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயர்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

தோழியர் மொழிவது : பல்வேறு இன வண்டுகள் மொய்க்கின்ற பலவண்ண மலர்கள் நிறைந்த குளத்தில் கைகளால் குடைந்து நீராடும்பொழுது உன் திருவடிகளைப் பாடி, வழிவழியாக வந்த அடியார்களாகிய நாங்கள் பெரு வாழ்வுபெற்றோம். ஐயனே! சுவாலையுடன் ஆர்க்கின்ற நெருப்பு போன்ற சிவந்தவண்ணத்தைக் கொண்டவனே! திருநீற்றைப் பூசும் செல்வனே ! சிறிய இடையையும், கண்மை நிறைந்த அகன்ற கண்களையும் கொண்ட உமையின் மணவாளனே ! ஐயா, நீ ஆட்கொண்டு அருளும் திருவிளையாடலில் உய்யும் அடியார்கள் உய்யும் வகையில் நாங்களும் உய்ந்துவிட்டோம் ! நாங்கள் தளர்வுறாமல் எங்களைக் காப்பாயாக !

மொய் – மொய்க்கின்ற வண்டு; தடம் – நீர்நிலை; பொய்கை – குளம்;அழல் – தீ; மருங்குல் – இடை; எய்த்தல் – இளைத்தல்.

திருவெம்பாவை 12

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன் நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். 12

தோழியர் சொல்வது : நாம் விரும்பி வழிபடும் எம்பெருமான தீர்த்தன், பிறவித் துன்பம் கெடுவதற்காக பெரிய ஆரவாரம் செய்கின்றான்; சிவபெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் நெருப்பை ஏந்தி கூத்தாடுகின்ற கூத்தப்பிரான்; இந்த விண்ணையும், மண்ணையும், நம் எல்லோரையும் விளையாட்டாகவே காத்தும், படைத்தும், கவர்ந்தும் அருள்பாலிப்பவன்; அவனுடைய புகழைப் போற்றியும், வளைகள் இசை ஒலிக்கவும், மேகலைகள் பேரொலியாக ஆராவரிக்கவும், நீண்ட கருங்கூந்தல் மேல் வண்டுகள் ரீங்காரமிடவும், நறு மணம் கொண்ட பூக்கள் நிறைந்த இத்தடாகத்தில் நம் எல்லோருக்கும் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் இறைவனின் பொற்பாதத்தை வாழ்த்திக்கொண்டே நீராடுங்கள் !

குவலயம் – பூமி; கரத்தல் – உள் வாங்குதல்; குழல் – கூந்தல்.
திருவெம்பாவை 13

திருவெம்பாவை 13

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 13

தோழியர் செப்புவது : குவளையின் கருமையான வண்ண மலராலும், செந்தாமரை மலரின் சிவந்த நிறத்தாலும், சிறிய தோற்றத்தை உடைய வண்டுகள் செய்யும் ரீங்கார ஒலியாலும், தங்களுடைய குற்றங்களை களைய வேண்டுபவர்கள் வந்து தொழும்பொழுது, எங்கள் பிராட்டியான சக்தியும், எம்பிரான் சிவபெருமானும் இருப்பதுபோலக் காட்சிதரும். நீர் நிறைந்த இம்மடுவில் பரவி அளைந்து, நாம் அணிந்துள்ள சங்குகள் சலசலக்க, சிலம்பு அத்துடன் இணைந்து இசைத்தொலி க்க ,

மார்பகங்கள் விம்ம, விம்ம அளைந்தாடும் நீரும் விம்மி மேற்பொங்க, தாமரை மலர் நிறைந்த இம்மடுநீரில் நீராடுங்கள் !

கார் – கறுப்பு; போது – மலர்; கொங்கை – பெண்ணின் மார்பகம்; பங்கயம் – தாமரை; புனல் – நீர்

திருவெம்பாவை 14

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளை
தன் பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

தோழியர் சொல்வது: இரு காதுகளிலும் அணிந்த குழைகள் குலுங்கி ஆட , பொன் அணிகலன்கள் அசைந்து ஆட, பூமாலை அணிந்துள்ள கூந்தல் அலையாய் ஆட, அதைச் சுற்றும் வண்டுக் கூட்டம் தழும்பி ஆட, குளிர்ந்த சுனை நீராடி திருச்சிற்றம்பலத்தின் வல்லமையைப் பாடி, வேதத்தின் கருப்பொருளாகிய சிவபெருமானை உணர்ந்துபாடி, இறைவன் வேதத்தின் கருப்பொருளாகும் திறத்தினைப் பாடி, அவனுடைய சோதி வடிவின் பெருமைகளைப் பாடி, இறைவன் சடாமுடி கூந்தலில் அணிந்துள்ள கொன்றைக் கொத்தினைப் புகழ்ந்து பாடி, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் பரஞ்சோதி எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்கின்ற மேன்மையைப் பாடி, சிவபெருமானே எல்லாவற்றிற்கும் இறுதியுமாக இருக்கின்ற உண்மையைப் பாடி, மும்மலத்தையும் பிறவற்றையும் நீக்கி நம்மைவளர்த்தெடுத்த இறையருட் சத்தியின் பாதத் தத்துவத்தையும் பாடி நீராடுங்கள் !

பைம்பூண் – பொன்னாபரணம்; கோதை – பூமாலை; குழாம் – கூட்டம்; சீதம் – குளுமை; தார் – மாலை.

திருவெம்பாவை 15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 15

தோழியர் மொழிவது : அந்தந்த நேரகளில் "எம்பெருமான்" "எம்பெருமான்" என்று கூறிக்கூறி, எங்கள் பெருமானின் பெருமைகளையே வாய் ஓயாமல் எப்பொழுதும் உள்ளமெல்லாம் மகிழச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். எப்பொழுதும் விடாது வழிந்து கொண்டிருக்கும் தாரை தாரையான கண்ணீரில் தோய்ந்து, இறைவனையே எண்ணி எப்போதும் அவனுடன் இருக்கும், இவள் இவ்வுலக நினைவுக்கே திரும்புவதில்லை! வேறு தேவர்களை இவள் பணிவதில்லை! பேரரசனாகிய இறைவன் பால்இவ்வாறு பித்துப் பிடிக்கும் தன்மையையும், அவ்வாறு செய்து ஆட்கொள்ளும் பண்பாளராகியபரஞ்சோதியான சிவபெருமானின் திருப்பாதங்களையும் வாயாரப் பாடி, கச்சை அணிந்த மார்பகம் உடைய பெண்களே, நாம் நேர்த்தியான, பல்வேறு மலர் நிறைந்த இத்தடாக நீரில் நீராடு வோம் !

ஓவாள் – ஓயமாட்டாள்; களி – மகிழ்ச்சி; பனித்தல் – ஈரமாக்குதல்; பார் – உலகம்; அரையர் – அரசர்.

திருவெம்பாவை 16

முன் இக்கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

தோழியர் மொழிவது : வானில் அலை, அலையாக திரண்டுள்ள மழையே ! இக் கடலில் உள்ள நீர் ஆவியாச் சூல் கொண்டு ஆகாயத்திலே எழுந்து, கார் காலத்தில் காணப்படும் உமையம்மையைப்போன்ற நிறத்தில் திகழ்க! நம்மை ஆளுடைய அவளின் மெல்லிய இடை போன்று மின்னலாய்ப் பொலிக ! எம்பிராட்டியின் திருவடியில் திகழும் பொற்சிலம்பின் இடி ஓசை போல ஒலிக்க! அவளுடைய வளைந்த மெல்லிய திருப்புருவம் போல வான்வில்லாய் வளைக! எங்களை ஆளுடைய அவளோடு எப்பொழுதும் பிரிவேயின்றி விளங்கும் ஆதியும், அந்தமும் இல்லாத எம்பிரானாகிய சிவபெருமானுடைய அன்பர்களுக்கு, முனைப்போடுதான் வந்து அவள் விரைவாகவே அளிக்கின்ற இனிய அருள்என்பது போலப் பொழிக!

இட்டிடை – சிறிய இடை; சிலை குலவுதல் – வில்லென வளைதல்;முன்னி – முற்பட்டு.

திருவெம்பாவை 17

செங்கணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்
எங்கும் இலாதோர் இன்பம் நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 17

தோழியர் சொல்வது : பல்வேறு இன வண்டுகள் இனிய தெவிட்டடாத தேனை உண்ணும், நறு மணம் கொண்ட பூக்கள் நிறைந்த கரிய கூந்தலை கொண்டவளே! செந்நிறக் கண்ணை உடைய திருமாலிடமும், திசைக்கு ஒன்றாக நான்கு முகங்களை உடைய பிரமனிடமும், எல்லாத் தேவர்களிடமும் எங்குமே இல்லாத அரிய இன்பம் நம்முடையதாகுமாறு, எங்களுடைய குற்றங்களை எல்லாம் அகற்றி போக்கி, எங்கள் எல்லார்க்கும் எங்களுடைய இல்லங்களில் இருந்து அன்றலர்ந்த செந்நிற செந்தாமரை போன்ற பொற்பாதங்களைத் தந்தருளச் செய்யும் தொழில் உடையவனை, அழகிய கண்களை உடைய எங்கள் அரசனை, அடிமைகளாகிய நமக்கு ஆரமுதமானவனை,நம்பிரானைப் பாடுவதால் நலம் ஓங்க, பல்வேறு இன தாமரைகள் நிறைந்தஇந்நீரில் பாய்ந்தாடுவோம் !

கொங்கு – தேன் (உண்ணும் வண்டு); கோதாட்டி – குற்றம் நீக்கி;சேவகன் – ஊழியன்; பங்கயம் – தாமரை.

திருவெம்பாவை 18

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ ற்றறாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்

தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

உற்பத்தியும் முடிவும் அற்றதோர் அரிய பெரிய ஜோதியின் பாதாரவிந்தங்களை வணங்கும் விண்ணவர்களுக்கு அருள் செய்வதைப்போல்,எங்களையும் ஆட்கொண்டு எல்லோருக்கும் அருள் பாலிக்கும் சிவபெருமானை நெக்குருகக் கசிந்துருகிப் பாடி நாங்கள் எல்லோரும் எம்பெருமானை வணங்குவோம்.சூரியன் உதித்ததும் அதன் கதிர்கள் பரம்பி வந்து இருளை அகற்றி சந்திர ஒளி குன்றி நட்சத்திரங்கள் ஒளி மழுங்கும்.பெண்ணாகவும் ஆணாகவும் அலியாகவும் விண்ணாகவும் மண்ணாகவும் இருந்து எங்களை ஆட்கொண்டு அருள் பாலிக்கும், வேதத்தால் உயர்வாக உணரப்படும் மேன்மையான ஒப்பற்ற பரஞ்சோதியான, இனிய சிவபெருமானை நெக்குருகக் கசிந்துருகிப் பாடுவோம்.

திருவெம்பாவை 19

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்

தோழியர் கூற்று : உன்கையில் உள்ள குழந்தை உனக்கே உரியது என்ற பழமையான கூற்று பொய்யாகிவிடுமோ என்று ஒருபோதும் அச்சப்படவேண்டாம்.
உனக்கு ஒன்றை மாத்திரம் எல்லாரும் சேர்ந்து சொல்லுகின்றோம். ஆதியும் அந்தமும் இல்லாத பெருமானை "என் அத்தன், ஆனந்தன்,அமுதன்" என்று வாய் திளைக்க இனிக்க இனிக்கப் பேசுவாயே தோழி? இவ்வுலகமும், விண்ணுலகமும், பிறவுலகங்களும் அறிவதற்கு அரிய ஒப்பற்ற பரஞ்சோதியே எங்கள் பெருமானாவார். எங்களுடைய கரங்கள் இறை பணி தவிர வேறு எதனையுமே செய்ய மாட்டா. உண்மையான அடியார்களான நாங்கள், இரவும் பகலும் இறை சிந்தனை தவிர வேறு எதனையுமே நினைக்காமல் நாங்கள் எல்லோரும் பாடுகின்றோம்.

திருவெம்பாவை 20

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்

ஆரம்பமும் முடிவும் அற்றதோர் அரிய பெரிய ஜோதியுடைய பாதார விந்தங்களை வாழ்த்தி வணங்குவோம்.எப்பொழுதும் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் இறைவனின் அந்தமாஞ் செந்தளிர்களான பொற்பாதங்களை வணங்குவோம்.
எல்லா உயிர்களுடைய தோற்றத்துக்கும் காரணமான வேதத்தால் உயர்வாக உணரப்படும் மேன்மையான பொருளின் பொற்பாதங்களை பணிந்து வணங்குவோம்.எல்லா உயிர்களுடைய போகங்களுக்கும் அடிப்படையான
இவ்வுலகமும், விண்ணுலகமும், பிறவுலகங்களும் அறிவதற்கு அரிய பெருமானுடைய திருப்பூங்கழல்களை மனதார வணங்குவோம்.எல்லா உயிர்களுடைய கற்பனைக்கு எட்டாதவையாக உள்ள இறைவனுடைய

ஈறாம் இணையடிகளை வணங்குவோம். திருமாலும் நான்முகனும் அடிமுடி காணமுடியாத, ஆதியும் அந்தமும் இல்லாத மலையாக நின்ற எம்பெருமானுடைய திருப்பாதங்களை வாயார வாழ்த்தி வணங்குவோம்.எங்களை உய்த்து ஆட்கொண்டருளும் ஒப்பற்ற அப்பெருமானின் பரங்கருணையையும், மேன்மையான மாசற்ற பொன்மலர்ப்பாதங்களை போற்றி வணங்குவோம். மார்கழி மாதத்தில் நீராடும் நாங்கள், வரலாறு தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய மிகப் பழமையான பொருள்களுக்கு எல்லாம் பழமையான முதல்வனா னவனும், வரலாற்றுக்கு பின்னே தோன்றிய நவீன புதுமையான பொருள்களுக்கு எல்லாம் புதுமையானவவனும் ஆன வேதத்தின் கருப்பொருளாகிய சிவபெருமானை பணிந்து வணங்குவோம்.

## சிவாகம பூசை செய்யும் முறை

காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களே சிவஞானங்களெனப்படும். அவற்றுள்,
காமிகம், மூன்று பேதத்துடன் பரார்த்தங்கிரந்தங்களையுடையது,
யோகஜம், ஐந்து பேதத்துடன் லக்ஷங்கிரந்தங்களையுடையது,
சிந்தியம், ஆறு பேதத்தடன் லக்ஷங்கிரந்தங்களையுடையது,
காரணம், ஏழு பேதத்துடன் கோடி கிரந்தங்களையுடையது,
அஜிதம், நான்கு பேதத்துடன் லக்ஷஙகிரந்தங்களையுடையது,
தீப்தம், ஒன்பது பேதத்துடன் லக்ஷங்கிரந்தங்களையுடையது,
சூக்குமம், ஒரு பேதத்துடன் பத்மமென்னுங் கிரந்தங்களையுடையது,
சகஸ்கரம், பத்துப் பேதத்துடன் சங்கமென்னுங்கிரந்தங்களையுடையது,
அம்சுமான், பன்னிரண்டு பேதத்துடன் ஐந்து லக்ஷங்கிரந்தங்களையுடையது,
சுப்ரபேதம், ஒரு பேதத்துடன் மூன்றுகோடி கிரந்தங்களையுடையது,
விஜயம், எட்டுப் பேதத்துடன் மூன்றுகோடி கிரந்தங்களையுயைடது,
நிசுவாசம், எட்டுப் பேதத்துடன் கோடி கிரந்தங்களையுடையது,
சுவாயம்புவம், மூன்று பேதத்துடன் ஒன்றரைக்கோடி கிரந்தங்களையுடையது,
அனலம், ஒரு பேதத்தையும் முப்பதாயிரங்கிரந்தங்களையுமுடையது,
வீரம், பதின்மூன்று பேதங்களையும் லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,
ரௌரவம், ஆறு பேதங்களையும் எண்பதுபோடி கிரந்தங்களையுமுடையது,
மகுடம், இரண்டு பேதங்களையும் லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,
விமலம், பதினாறு பேதங்களையும் மூன்று லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,
சந்திரஞானம், பதினான்கு பேதங்களையும் மூன்று கோடிகிரந்தங்களையுமுடையது,
பிம்பம், பதினைந்து பேதங்களையும் லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,
புரோத்கீதம், பதினாறு பேதங்களையும் மூன்றுலக்ஷங் கிரந்தங்களையுமுடையது,
லளிதம், மூன்று பேதங்களையும் எண்ணாயிரங் கிரந்தங்களையுமுடையது,
சித்தம், நான்கு பேதங்களையும் ஒன்றரைக்கோடி கிரந்தங்களையுமுடையது,
சந்தானம், ஏழு பேதங்களையும் ஆறாயிரங்கிரந்தங்களையுமுடையது,
சா¢வோக்தம், ஐந்து பேதங்களையும் இரண்டு லக்ஷங் கிரந்தங்களையுமுடையது,
பாரமேசுவரம், ஏழு பேதங்களையும் பன்னிரண்டு லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,
கிரணம், ஒன்பது பேதங்களையும் ஐந்துகோடி கிரந்தங்களையுமுடையது,
வாதுளம், பன்னிரண்டு பேதங்களையும் லக்ஷங்கிரந்தங்களையுமுடையது,

இவ்வாறு திவ்யாகமங்களுள் மூலாகமங்கள் இருபத்தெட்டுள்ளன. இந்த ஆகமங்களின் சுலோக எண் பரார்த்தம், பத்மம், சங்கமென்னும் எண்களுடன் தொண்ணூற்றொன்பது கோடியே முப்பத்து மூன்று லக்ஷத்து நாற்பத்து நாலாயிரமாகும். மூலாகமங்களின் பேதங்களான உபாகமங்கள் இருநூற்றேழு ஆகும்.